# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
**MCOP. No.145/2021**

சாட்சி -PW2

பெயர் -திரு.முகேஷ்குமார்

தந்தை பெயர் - துளசிராமன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.08.2026.**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி 3 ஆம் தரப்பினர் ஆவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் பிரமாணமாய் கூறுப்பட்டவையாகும். அதை முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் எதுவும் வரவில்லை. தியாகராஜன் அழைத்து சாட்சி சொல்ல வந்தேன். நான் என்னுடைய ஆதார் கார்ட்டை கொண்டு வந்துள்ளேன். 16.11.2017ல் விபத்து ஏற்பட்டது. விபத்து இரவு 8 மணிக்கு ஏற்பட்டது. விபத்து பலவன்சாத்து குப்பத்தில் ஏற்பட்டது. பிரமாண வாக்குமுலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பலவன் சாத்து, ஆற்காடு சாலையில் விபத்து ஏற்பட்டது.

தியாகராஜன் என்பவரை எனக்கு தெரியும். அவரது மகன் இறந்ததற்கு தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். இருசக்கர வாகனத்தின் எண். TN 23AM 4539 ஆகும். இருசக்கர வாகனம் சாலையின் மத்தியில் போய் கொண்டு இருந்தது. ஆட்டோ எதிரே வந்து மோதி விட்டது. ஆட்டோவின் பதிவு எண் தெரியாது. நான் விபத்தின் சாலையை கடப்பதற்காக அங்கு நின்று கொண்டு இருந்தேன்.

விபத்து குறித்து போலிசில் நான் புகார் கொடுக்கவில்லை. போலிசார் என்னை

காவல் நிலையத்தில் விசாரிக்கவில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் தியாகராஜன் கேட்டு கொண்டுதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பார்க்காத விபத்தை பார்த்தாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது நிருபண வாக்குமுலத்தில் விபத்தை பற்றி மற்றவர்கள் சொன்னதை கேட்டதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தியாகராஜன் எனக்கு தெரிந்தவர் என்பதால் பார்க்காத விபத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை</u> (2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்)

எனக்கு வயது 26 ஆகிறது. நான் லாரி வைத்து டிரான்ஸ்போர்ட் பிசினஸ் செய்கிறேன். சொந்த லாரியை வைத்து வாடகைக்கு விட்டு தொழில் செய்கிறேன். இருசக்கர வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணம் செய்தாரகள் என்று எனக்கு தெரியும். ராகுல், சந்தோஷ்குமார், பால்சன் ஆகியோர் பயணம் செய்தார்கள். என்னுடைய ஊர்காரர்கள் என்பதால் எனக்கு தெரியும். விபத்து சமயத்தில் அவர்கள் 10 ஆம் வகுப்பு படித்தார்கள். ராகுல் விபத்து சமயத்தில் இளவராக தான் இருந்தார் என்றால் சரி. நான் விபத்தை பார்க்கவில்லை என்றும், தியாகராஜனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the 04th day of August 2026.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.08.05 02:13:33 +0600

Additional District Judge(FTC),
Vellore.